# 'தி இந்து' உயர்கல்வி வழிகாட்டி கருத்தரங்கு

## திரளான மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்பு

■ திருச்சி

'தி இந்து - எஜுகேஷன் பிளஸ்' மற்றும் சாஸ்த்ரா பல்கலைக்கழகம் இணைந்து திருச்சியில் நேற்று நடத்திய பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கான உயர்கல்வி வழிகாட்டி கருத்தரங்கில் ஏராளமான மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகேயுள்ள ஹோட்டல் ரம்யாஸ் சௌபாக்யா அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 'தி இந்து' திருச்சி மண்டல மேலாளர் கே.சந்திரசேகரன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.எம்.முத்துக்குமார் பேசும் போது, "போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்கள் தொடர்புத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தாழ்வு மனப்பான்மை, பயம் ஆகியவற்றை மனதிலிருந்து அகற்றி, முனைந்து போராடினால் வெற்றி தேடிவரும். நேசிக்கவும், யோசிக்கவும், வாசிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கை மேம்பட வாசிப்புப் பழக்கம் உதவும்.

இரண்டு நோபல் பரிசுகளை வென்ற மேரி க்யூரி அம்மையாருக்கு, ஒரு கல்லூரியில் உயர்கல்வி பயில வாய்ப்பு மறுக்கப்பட்டது. அதற்காக அவர் துவண்டுவிடவில்லை. விடாமுயற்சியுடன் போராடி ரேடியம் கண்டுபிடித்தார். அவருக்கு வாய்ப்பை மறுத்த கல்லூரி, அவருக்கு சிலை வைத்துக் கொண்டாடியது. எனவே, மாணவர்கள் வைராக்கியத்துடன் உழைத்து சாதனை படைக்க வேண்டும்" என்றார்.

சாஸ்த்ரா பல்கலைக் கழக டீன் பத்ரிநாத் பேசும் போது, "இந்தியாவில் வேலைவாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. தகுதியும், திறமையும் மிக்கவர்கள்தான் கிடைப்பதில்லை. நேர்முகத் தேர்வின்போது திறமையை வெளிப்படுத்துபவருக்கே வாய்ப்பு கிடைக்கிறது. எனவே, புத்தகப் படிப்புடன், பல்வேறு திறன்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். நல்ல ஆசிரியர்கள் கொண்ட, சிறந்த உட்கட்டமைப்புடைய, தரமான கல்வி போதிக்கும் கல்லூரிகளை கல்வி பயில தேர்வு செய்யுங்கள்" என்றார்.

கேலக்ஸி மேலாண்மை நிறுவன இயக்குநர் ரமேஷ் பிரபா பேசும்போது, "என்ன படிக்கலாம் என்பதை பெற்றோருடன் இணைந்து பேசி முடிவெடுங்கள். நல்ல கல்லூரியைத் தேர்வு செய்வதில் முன்னுரிமை கொடுங்கள். சிறந்த கல்லூரியில் என்ன படித்தாலும் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் உண்டு. மருத்துவக் கல்லூரியில் படிக்க வாய்ப்பு கிடைக்காதவர்கள் துணை மருத்துவப் படிப்புகளைத் தேர்வு செய்யலாம். திரைப்படக் கல்லூரி, கவின் கலைக் கல்லூரி, ஆடை வடிவமைப்புக் கல்லூரி, இசை, சுற்றுலா, சமையல், உணவக மேலாண்மை என பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் உள்ளன.

எனவே, ஒரே துறையின் பின்னால் அனைவரும் செல்லாமல், திறன் சார்ந்த, வேலைவாய்ப்பு உள்ள கல்வியைத் தேடிச் சென்று படிப்பது நல்லது.

பெற்றோர், பிள்ளைகளுக்கு வெற்றியைக் கொண்டாட சொல்லிக் கொடுப்பதுபோல தோல்வியைத் தாங்கிக் கொள்ளவும் கற்றுக் கொடுக்க வேண்டும். மாணவ, மாணவியர் தேர்வில் தோல்வியடைந்தால் எக்காரணத்தைக் கொண்டும் தவறான முடிவை எடுக்காதீர்கள். கல்வி பயிலும் காலத்தில் காதலுக்கு இடமளிக்காதீர்கள். தவறு செய்யும் எண்ணம் தோன்றும்போது, உங்களுக்காகப் பாடுபடும் பெற்றோரை நினைத்துப்பாருங்கள். தவறான வழியில் செல்லும் எண்ணம் போய்விடும்" என்றார்.






▲ 'தி இந்து - எஜுகேஷன் பிளஸ்' மற்றும் சாஸ்த்ரா பல்கலைக்கழகம் இணைந்து திருச்சியில் நேற்று நடத்திய உயர்கல்வி வழிகாட்டி கருத்தரங்கில் பேசும் பாரதிதாசன் பல்கலை. துணைவேந்தர் வி.எம்.முத்துக்குமார். உடன், மனிதவளப் பயிற்றுநர் சோம.வள்ளியப்பன், சாஸ்த்ரா பல்கலை. டீன் வி.பத்ரிநாத், கேலக்ஸி மேலாண்மை நிறுவன இயக்குநர் ரமேஷ் பிரபா, கல்வியாளர் அனுஷா. (அடுத்த படம்) கருத்தரங்கில் பங்கேற்ற மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர். படங்கள்: ஜி.ஞானவேல்முருகன்

கருத்தரங்கில், மனித வளப் பயிற்றுநர் சோம.வள்ளியப்பன், கல்வியாளர்கள் அனுஷா, சோலை மணி உள்ளிட்டோர் உயர்கல்வி, வேலைவாய்ப்பு குறித்து மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினர். சென்னை அமெட் பல்கலைக்கழகம், கோவை பார்க் இன்ஸ்டிடியூஷன்ஸ், சென்னை பிளேஸ் மி (அயல்நாட்டுக் கல்வி) நிறுவனம் ஆகியவை இணைந்து இக்கருத்தரங்கை நடத்தின.

Department of Library and Information Science
BHARATHIDASAN UNIVERSITY
TIRUCHIRAPPALLI-24